செ.வெ.எண:46/2020 நாள்:26.01.2020

## சிவகங்கை மாவட்டம்

## குடியரசு தினவிழாவில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து 129 பயனாளிகளுக்கு ரூ.14,47,196/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.ஜெயகாந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.!!!

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மைதானத்தில் (26.01.2020) இன்று நடைபெற்ற குடியரசு தினவிழா நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.ஜெயகாந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வருகை தந்தார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ரோஹித்நாதன் ராஜகோபால்,இ.கா.ப.,அவர்கள் வரவேற்றார். பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் காலை 8.05 மணியளவில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். தொடர்ந்து சுதந்திர போராட்ட தியாகிகளுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

நிகழ்ச்சியினைத் தொடர்ந்து, முன்னாள் படைவீரர் நலத்துறையின் மூலம் **5** பயனாளிகளுக்கு **ரூ.1,25,000/-** மதிப்பிலும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் **2** பயனாளிகளுக்கு **ரூ.1,17,680/-** மதிப்பிலும், வருவாய்த்துறையின் மூலம் **32** பயனாளிகளுக்கு **ரூ.32,000/-** மதிப்பிலும், தொழில் வணிகத்துறையின் மூலம் **7** பயனாளிகளுக்கு **ரூ.4,51,200/-** மதிப்பிலும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் **39** பயனாளிகளுக்கு **ரூ.2,52,500/-** மதிப்பிலும், தோட்டக்கலைத்துறை சார்பில் **5** பயனாளிக்கு **ரூ.1,87,250/-** மதிப்பிலும், வேளாண்மைத்துறை சார்பில் **35** பயனாளிகளுக்கு **ரூ.2,50,966/-** மதிப்பிலும், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் **4** பயனாளிகளுக்கு **ரூ.30,600/-** மதிப்பிலும், ஆக மொத்தம் **129** பயனாளிகளுக்கு **ரூ.14,47,196/-** மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.ஜெயகாந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

மேலும், காவல் துறையில் சிறப்பாக பணிபுரிந்த தமிழக முதலமைச்சரின் விருது 53 நபர்களுக்கும், சிறப்பாக பணிபுரிந்த 96 பணியாளர்களுக்கும் பதக்கம் மற்றும் நற்சான்றிதழ்களும், வருவாய்த்துறை மற்றும் பிறத்துறைகளில் சிறப்பாக பணிபுரிந்த 404 பணியாளர்களுக்கு சான்றிதழ்களும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

பின்னர், சிவகங்கை ஆக்ஸ்வர்டு மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, கண்ணங்குடி அரசு மேல்நிலைப்பள்ளி, மானாமதுரை ஓ.வெ.செ.மேல்நிலைப்பள்ளி, தேவகோட்டை இண்பெண்ட் ஜூஸஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, ஏரியூர் அரசு மேல்நிலைப்பள்ளி, மணலூர் அழகுமலர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, மானகிரி செட்டிநாடு பப்ளிக் பள்ளி, ஆகிய பள்ளிகளைச் சேர்ந்த 342 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்ட கலை நிகழ்ச்சிகளும், யோகா மற்றும் சிவம் மார்ஷியல் ஆர்ட்ஸ் கராத்தே பள்ளி சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.நாகராஜன் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.க.லதா, சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.ரத்தினவேல், மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் திரு.அருண்மணி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வடிவேல், கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர் திரு.மங்களேஸ்வரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.இராமபிரதீபன், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் திருமதி.செல்வகுமாரி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.பாலுமுத்து, சமூகபாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.காளிமுத்தன், தொழிலாளர் நலத்துறை அலுவலர் திருமதி.உஷா, துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.யசோதாமணி, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திரு.ராஜா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.விஜயநாதன், உதவி இயக்குநர் (நிலஅளவைத்துறை) திரு.யோகராஜா, காவல்துறை துணை கண்காணிப்பாளர் திரு.அப்துல்கபூர், சிவகங்கை வட்டாட்சியர் திருமதி.மைலாவதி மற்றும் அரசு அலுவலர்கள், காவல் துறை அலுவலர்கள், பொதுமக்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**::வெளியீடு::**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**சிவகங்கை.**